ஆஸாத்
AZAD

THE ONLY POLITICAL TAMIL MAGAZINE

KUMBAKONAM

FOUNDER: HAJEE M. ABDUR RAHMAN SAHIB • EDITOR: ~~MAULANA ABDUL HAKEEM~~



ந்தா ரூ. 3—0—0] 23-4-51. [தனி பிரதி அணா 0—2—0

அறிக்கை.

ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருடசந்தா (24 பிரதிகளுக்கு) ரூ. 3
(ரூபாய் மூன்று மட்டும்)

இதுவரையில் அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர் மூலம் அனுப்பி ஆதரிக்கவேண்டுகிறோம்.

*

மானேஜர்:- "ஆஸாத்"
கும்பகோணம்.

குடந்தையில் குற்றாலக் குளுமை.

குணம், மணம், சுவைமிக்க, ஒவ்வொரு சொட்டும் இனிய அமிர்தம் கோடை வெப்பத்தால் குழம்பிய இதயத்தை கணப்பொழுதில் சாந்தியளிக்கும் ஷர்பத் பானங்கள் உயரிய சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு நயமான விலையில் கிடைக்கும்.

வாருங்கள்! வந்து களிகூறுங்கள்!! சுகமடையுங்கள்!!!

பாம்பே ஐஸ் கூலிங் அண்டு
ஷர்பத் கம்பெனி,
103 பெரிய தெரு
பிராஞ்சு:- பெரியகடை வீதி, } கும்பகோணம்.

'AZAD' NATIONAL TAMIL BI-MONTHLY KUMBAKONAM.

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறை பத்திரிகை கும்பகோணம்.

மலர் 4 | கர-ஞு சித்திரை-மீ 10உ (23-4-1951) ஹிஜ்ரி 1370 ரஜப் 16உ திங்கட்கிழமை | இதழ் 4

இந்திய சிறுபான்மையினர் வருங்காலம்?

(பண்டித் மேலாராம்)

இந்தியரிடையே பரஸ்பரம் வேற்றுமைவளர்த்து, ஆங்கிலேயர் இந்நாட்டை ஆக்ரமித்தனர்; ஆக்கிரமிப்பை நீடிக்க "வேற்றுமை வளர்த்து ஆட்சி செய்" (Divide and rule) கொள்கையைக் கடைப்பிடித்தனர். அக்கொள்கை இந்நாட்டில் சிறுபான்மை பிரச்னை தலைதூக்கியதற்குக் காரணம். இக்கொள்கைக்கு ஆதரவாய் தங்கள் உரிமைகளுக்காக போராட சிறுபான்மைகளுக்கு ஊக்கமளித்து மறுபுறம் பெறும்பான்மையினரில் சுயநலவாதிகள் சிலரைத் தூண்டி அதைஎதிர்க்கச்செய்தனர். மதம் மனிதனுக்கு சுதந்திரம், நேசம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பொதுஜனசேவை முதலிய உன்னத கொள்கைகளையே போதிக்கிறது ஆனால் இந்தியாவில் ஒருவர் கழுத்தை மற்றவர் அறுக்கவும், சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டையிட்டு அடிமைத் தளைகளுக்கு வலுவூட்டுமாறு மதத்தின் போக்கை மாற்றியமைத்துவிட்டனர். உரிமைகளுக்கு போராடும் கட்சி, அதை எதிர்க்கும் கும்பல் முதலியவற்றிற்கு தலைமைதாங்கும் கயவர்கள் தங்களுக்குள் பரஸ்பரம் பாலும், பாகும் போலிருந்து, வைஸ்ராய் மாளிகையில் உட்கார்ந்து தங்களைப் பின்பற்றுவோருக்குள் எவ்விதம் பகைமையை வளர்த்து சண்டையிடச்செய்யலாம் என்று ஆலோசித்த உதாரணங்கள் பல இந்திய சரித்திரத்தில் காணக்கிடக்கின்றன. ஆங்கிலேயரிடமே தங்களுக்கு உரிமைகள் கிடைக்கக் கூடும் என்றும், அவற்றிற்கு அபாயம் நேரிடாது என்ற எண்ணத்தை தம்மை பின்பற்றுவோர் உள்ளங்களில் உண்டாகச்செய்வதே அச்சுயநலவாதிகளின் முக்கிய கடமையாயிருந்தது

இன்று ஆங்கிலேயர் இந்நாட்டை விட்டு வெளியேறியபின் இந்தியா-பாக் என்ற இரு பாகங்களாய் பாரதநாடு துண்டாடப் பட்டபின் சிறுபான்மைப் பிரச்னை அர்த்தமற்றதாகி யிருக்கவேண்டும். இத்துறையில், பாரத அரசியலில் பெறும்பான்மை-சிறுபான்மை என்ற வித்தியாசம் அடியோடு ஒழிக்கப் பட்டது மனதிற்கு சாந்தியளிக்கும் விஷயமாகும், தனித்தேர்தல், உத்தியோகங்களில் வகுப்புவாரி உரிமையாகியவை போன்ற இரட்டை சாபக்கேட்டை அரசியல் முறை நிரந்தரமாய் விரட்டியடித்துள்ளது, ஆனந்தமூட்டும் விஷயமாகும் இதன்படி பாரதநாடு ஒரு, மத சார்பற்ற அரசாங்கமாகும். இந்நாட்டில் முஸ்லிம், கிருஸ்தவர், சீக்கியர், பார்ஸி முதலிய சிறுபான்மையினருக்கும் ஹிந்து பெறும்பான்மைக்குள்ளதுபோல் சம உரிமைகளே உண்டு. எல்லா ஹிந்து முஸ்லிம் கிருஸ்துவர் சீக்கியர் முதலியோர் யாவரும் இந்நாட்டின் பிரஜைகளே ஆகவே முன்னேற்ற உரிமைகள், அனைவருக்கும் ஒன்றே எந்த சமூகத்தாருக்கும் எவ்வித சலுகையும் கிடையாது.

ஆரம்பத்தில் கூறியதுபோல், சிறுபான்மைப் பிரச்னை, உரிமை கோரிக்கையை அடிப்படையாய்க் கொண்டு எழுந்தது. மதப் பாதுகாப்பு என்ற போர்வையிலேயே உரிமைகளும் வெளிப்பட்டன, ஆனால் பாரத அரசியலை கூர்ந்து கவனித்தால் சுதந்தரம் கிடைத்தபின் எந்த சமூகத்துக்கும் தனி உரிமைகளும் பாதுகாப்பும் அவசியமில்லையென்று தெரியும். அதன் 15-ம் விதியில் ஜாதி, மதம். இனம் காரணமாக எந்த பிரஜைக்கும் எவ்வித தனிச்சலுகையும் காட்டப்படாது என்று வெளிப்படையாயும், சந்தேகத்திற்கிடமின்றியும், கூறப்பட்டிருக்கிறது 16ம் ஷரத்துப்படி, சர்க்கார் உத்தியோகங்கள் பெறும் சந்தர்ப்பம் மத, ஜாதி இனம் என்ற பாகுபாடின்றி யாவருக்கும் சமமே, எவருக்கும் மேற்படி வித்தியாசம் காரணமாக தனி உரிமை கிடையாது அதேபோல், வியாபாரம் சொத்துரிமை யாவற்றிலும் மத, இன வித்தியாசமின்றி யாவருக்கு சம உரிமை யளிக்கப்பட்டிருக்கிறது சர்வ மதங்களுக்கும் பாதுகாப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது. 25ம் ஷரத்துப்பிரகாரம் பிரஜைகள் யாவருக்கும் சிந்தனைச் சுதந்தரம் உண்டு அதன்படி எந்த ஒரு மதத்தைப் பின்பற்றவும் அதைப் பிரசாரம் செய்ய பூரண உரிமை உண்டு அதே ஷரத்தில் சீக்கியர்கள் கிர்பான் வைத்துக்கொள்வது அவர்களுடைய மதக்கடமை என்று உறுதி யளிக்கப்பட்டிருக்கிறது.

26-ம் ஷரத்து மதஸ்தாபனங்களுக்கு பூரண சுதந்தரமளிக்கும் உறுதிப்பத்திரம் என்றே கூற வேண்டும் அதன்படி ஒவ்வொரு மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கும், அதை நிர்வகிக்கவும் தரும நிதிகள்

சேர்க்கவும், அவற்றை முறைப்படி செலவழிக்க சங்கங்கள் அமைக்கவும் சொத்துக்கள் வாங்கவும், அவற்றைப் பராமரிக்கவும், பூரண உரிமைகளுண்டு குறிப்பிட்ட ஒரு மதத்தை பிரசாரம் செய்ய உதவும் விதத்தில் எவ்விதவரியும் கொடுக்க யாரும் வற்புறுத்தப்படமாட்டார் என்று 27-ஷரத்து கூறுகிறது. 30-ஷரத்துப்படி சிறுபான்மையினர் மதம் காரணமாயினும் மொழி காரணமாயினும் சரி தங்கள் பிரியப்படி கல்வி ஸ்தாபனங்களை அமைக்கவும் அவற்றை நடத்தவும் உரிமையுண்டு. கல்வி ஸ்தாபனங்களுக்கு நிதியுதவியளிப்பதில் குறிப்பிட்ட ஸ்தாபனம் எந்த வகுப்பாரால் நிர்வகிக்கப்படுகிறதென்று பார்க்கப்படமாட்டாது.

நேர்மையான முறையில் கோரப்படத்தக்க எல்லா வித பாதுகாப்புகளும் உரிமைகளும் பாரத அரசியலில் அடிப்படை உரிமைகளாய் இடம் பெற்றிருக்கின்றன. இவற்றிற்கும் அதிக உரிமைகள் கோருவோர், சிறுபான்மையோருக்கு பெரும்பான்மையினரின் நல்லெண்ணமே தக்க பாதுகாப்பு என்பதை மறந்துவிடுகின்றனர். ஆங்கிலேயர் காலம் வேறு ஆனால் ஜனநாயக முறையில் பெரும்பான்மையை சிறுபான்மையாகவும் சிறுபான்மையை பெரும்பான்மையாகவும் மாற்றியமைக்கத்தக்க முறையேயில்லை எத்தனை உரிமைகள் பெற்றாலும், சிறுபான்மை சிறுபான்மையாகவே யிருக்கும் தனிச்சலுகைகள் பெற்றுக்கொண்டால் வாக்கெடுப்பில் சிறுபான்மையினருக்கு தோல்வியே சம்பவிக்கும் மேலும் பல சந்தர்ப்பங்களில் அவற்றின் சக்தி குறைந்துவிடும் தவிர சில சந்தர்ப்பங்களில் நேர்மையான உரிமைகளும் பறிபோகக்கூடும். இம்முறையில் சிறுபான்மை-பெரும்பான்மை, என்ற இரு எதிர் சக்திகள் தோன்றிவிடும் அந்நிலைமை, சந்தேகமற பெரும்பான்மையினருக்கு தொல்லை கொடுக்கக் கூடியதே ஆனால் சிறுபான்மையினருக்கும் அளவிலா இன்னல்கள் உண்டாகிவிடும் என்பது திண்ணம்.

இதற்கு மாறாக சிறுபான்மையினர் பெரும்பான்மையிடத்தில் நம்பிக்கை வைத்து தனிச்சலுகைகள், உரிமைகள் கோராமலிருந்தால், பெரும்பான்மையினருக்கு சிறுபான்மையின் தேசபக்தியில் நம்பிக்கையுண்டாகி, அதனுடன் நேசமாயிருக்கவும், அதன் உரிமைகளைப் பாதுகாக்கவும், நல்லெண்ணம் உண்டாகக்கூடும் அதனால் சிறுபான்மை நல்ல லாபமடைந்து தன் உரிமைகளுக்கும் அதிகமாகப் பெறவும் கூடும். சிறுபான்மை, பெரும்பான்மை என்ற வித்தியாசம் எடுபட்டு, ஒவ்வொருவரும் தங்கள் செயல் திறமைக்கும் தேச பக்திக்கும் தக்க முறையில் உழைத்து தேசத்தை அதன் உன்னத ஸ்தானம் வரை உயர்த்துவதிலேயே சிறுபான்மையினருக்கு பெருத்த லாபம் உண்டு. அதற்கு மாறான முறையால் என்றென்றும் எதிர்கட்சியாயிருந்து, தமது திறமைவாய்ந்த தலைவர்களுக்கும் ஆட்சிபீடத்திலமரும் பாக்கியம் கிடைக்காது வருந்தவேண்டிய நிலைமையிலேயே சிறுபான்மையினர் இருந்துவிடவேண்டிவரும்.

ஆங்கிலோ-இந்தியர், ஆஸாம் சுதேசிகள் மற்ற பின் தங்கிய சமூகத்தார் முதலியோருக்கு சில சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. இவ்விஷயத்திலுள்ள மறுக்க முடியாத உண்மைகள் சிலவற்றைப் புறக்கணித்துவிட முடியாது. கல்வித்துறை அதிக முன்னேற்றமடைந்துள்ளதாயினும் ஜன விகிதாசாரத்தில் ஆங்கிலோ-இந்தியர் மிக சொற்பமே ஆகவே தேர்தலின்போது அவர்களுக்கு பிரதிநிதித்வம் கிடைக்கவில்லையாயின் இரு பிரதிநிதிகளை நியமனம்செய்யும் அதிகாரம் ராஷ்டிரபதிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது அதேபோல் ராஜ்யங்களிலும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் நியமன அதிகாரம் கவர்னர்களுக்கு உண்டு தவிர ரயில்வே; தபால், தந்தி முதலிய இலாக்காக்களில் அவர்கள் உத்தியோகம்பெற சில சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன ஆயினும் அவை குறிப்பிட்ட சில வருடங்களுக்கே. பிறகு அச்சலுகைகள் தாமாகவே காலாவதியாகிவிடும். ஆஸாம் சுதேசிகளும் பிற்பட்ட சமூகத்தாரும் அரசியல் கல்வி முதலிய துறைகளில் மற்ற இந்தியர்களுக்கு மிக அதிகம் பின் தங்கிவிட்டமையால் அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது

பிரிவினை காரணமாய் நாட்டில் ஏற்பட்ட கலவரங்களும் அதனால் அல்லலுற்று படுகொலைக்காளாகிய எண்ணிறந்தவர்களின் சோகக்குறலும், விளைத்த அனர்த்தங்களால் இன்று வரை விடுதலைபெறமுடியாது தவிக்கும் இந்தியா-பாக் நாடுகளின் கேவல நிலைமையும், மதம் காரணமாய் சிறுபான்மை-பெரும் பான்மைக் கொள்கை எவ்வளவு பயங்கரமானது என்பதை எடுத்துக்காட்டக்கூடியவை. கண்டவற்றிற்கெல்லாம் மதத்திற்கு ஆபத்து என்ற கூச்சல் போடுபவர்களுக்கு அக்கலவரங்களும் அவற்றால் விளைந்த அழிவும் நற்புத்தி புகட்டக்கூடியது அவ்வறிவிலிகள் விழிப்படையவில்லையாயின் அவர்கள் கூக்குரலுக்குக்காரணமான மக்கள் அக்கயவர்களின் காற்று தம்மீது வீசாதவாறு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். பாரத அரசியலை விவரிக்கையில் கூறியதுபோல் எல்லா சமூகத்தாருக்கும் இந்நாட்டில் தக்க பாதுகாப்பு உண்டு. ஆகவே இங்கு மதத்திற்கு ஆபத்தில்லை ஆபத்தென்று கூச்சல் போடும் சுயநலவாதிகளுக்கே

ஹிந்து-முஸ்லிம் சிறுபான்மை பிரச்னை நேரு லியாகத் உடன்பாட்டை நல்ல முறையில் அமுலாக்குவதால் தீர்ந்துபோகும். அவ்வுடன்பாட்டின்படி பாக்-ஹிந்துக்கள் தங்கள் நாட்டின் விசுவாசம் மிக்க பிரஜைகளாகி, தங்கள் கஷ்ட நஷ்டங்களுக்கு அந்நாட்டு அரசாங்கத்தின் உதவியை நாடாது பாரத நாட்டை எவ்விதம் நம்பலாகாதோ, அதே விதம் பாரத முஸ்லிம் பாகிஸ்தான் உதவியை எதிர்பார்க்காமலிருப்பது கடமையாகும். இவ்விஷயத்தில் பாரத

ஹிந்து பெரும்பான்மையினர் போக்கு உதவலாம். பிரிவினைக்குப் பின் பாகிஸ்தானுக்கு ஓடாமல் இந்நாட்டில் தங்கிவிட்ட முஸ்லிம்கள் உண்மைமனதுடன் இந்நாட்டை தங்கள் தாயகமாக மதிக்கிறார்கள் என்பதை பெரும் பான்மையோர் நம்ப வேண்டும். அவ்விதம் நம்புவதில் எவ்வித தயக்கமும் இருக்கலாகாது.

சர்வதேச சகோதரத்துவம்

கலை, கலாச்சாரம், விஞ்ஞானம் அளிக்கும் வரப்பிரசாதம்.

மானிடவர்க்கத்தின் சகல குழப்பங்களுக்கும் மூலஸ்தானம் எது? குழப்ப அலைகள் முதலில் மானிட சிந்தனைகளில் தோன்றி பெருவெள்ளமாய் பாய்ந்தோடி அகிலஉலகையும் குழப்பமயமாக்கிவிடுகின்றன. ஆகவே மானிட இதயத்தை மாற்றியமைக்காதவரை, அவன்சிந்தனையின் போக்கை வேறுபக்கம் திருப்பாதவரை, பீதி, அவநம்பிக்கை, சந்தேகம், பொறாமை பேராசை முதலியவற்றை களைந்தெறியாதவரை, யுத்தப், படுகொலைகளுக்குக் காரணமானவற்றை நீக்க முடியாது.

ஐ. நா. கல்வி, கலாச்சார, விஞ்ஞான ஸ்தாபனத்தின் முக்கிய கடமை மேற்கூறிய பிரச்னைக்கு சுமுகமான பைசல் காணுவதே, ஏனெனில் நம் இதயம் மாறிவிட்டால், இருண்டு கிடக்கும் இதய அறைகள் பிரகாசம் பெற்றுவிட்டால் ந வாழ்க்கையின் கேடுகள் பலவும் ஆவியாய் மறைந்துவிடும், பொறாமை, வகுப்புவாதம், குறுகிய நோக்கம் முதலியவற்றின் படுநாசம் விளைவிக்கும் புயல் ஓய்ந்துவிடும் பிறகு மானிட உலகம், பரஸ்பரநேசம், அன்பு, நம்பிக்கை, நேர்மை, ஒத்துழைப்பு முதலிய புனிதங்களால் உண்டாகும் வசந்தத்தால் பூத்து மணங்கமழ்ந்த மோட்சமென காட்சியளிக்கும் சரித்திரகாலமுதல் மனிதன் பரஸ்பரம் நேசமு . நம்பிக்கையும் வளர பாடுபட்டு வந்திருக்கிறான் முயற்சி எத்தகையதாயினும், சிறிதளவாயினு செய்தேவந்தான். ஆனால் 1898 ஹேக்மகாநாட்டிற்குப்பின் அம்முயற்சி பரவலாக மேற்கொள்ளப்பட்டது. உலக நாடுகள் 59-ல் 26 நாட்டினர் ஒன்றாய்க்கூடி ஆயுத சன்னத்தாவதை தடைசெய்ய முற்பட்ட காட்சி அதற்குமுன் உலகமே கண்டிராததாகும் அதனாற்றான் ஹேக்மகாநாடு சர்வதேச சரித்திரத்தின் முக்கிய சம்பவமென சர்வதேச பேரறிஞர்கள் புகழுகின்றனர். 1907-ல் ஹேக்கில் இரண்டாவது மகாநாடு கூடியது அதில் 44-தேசத்தினர் கலந்து கொண்டனர் 1914-ம் ஆண்டு உலக யுத்தத்திற்குப் பின் சர்வதேச ஸ்தாபனம் தோன்றியது ஹேக்மஹாநாடு கண்டுபிடித்த குறைகளைப்போக்கி நல்ல சக்தி வாய்ந்த அடிப்படையில் சர்வதேசஸ்தாபனம் அமைக்கப்பட்டது. ஆனால் அவ் ஸ்தாபனங்களில் எதாவது தோன்றும் அரசியல் துறையில் சர்வதேச சகோதரத்துவத்திற்கு பொறுப்பேற்றுக்கொண்டதென கூறமுடியுமா? அகில உலகும் அரசியல் துறையில் ஒன்றாகி விடவேண்டுமென்ற நோக்கம் நிறைவேறியதா? உலகம் தன் பிரயாணம் தொடங்கிய இடத்திலேயே இன்றும் நிற்கிறது. ஒரு அடியும் முன்னேறவில்லை. அன்றைவிட இன்று பாதை இருளடைந்து காணப்படுகிறது. போய்ச்சேரவேண்டிய இடத்தின் அடையாளமும் காணவில்லை

இது இருபதாம் நூற்றாண்டு - நாகரீகம் மிக்கவர் என்ற பெருமை கொண்டாடுகிறோம் ஆனால் மானிடன்-மானிடனின் இரத்தம் புசிக்க துடிதுடிக்கும் அளவு காட்டுமிராண்டிகளாகிவிட்டோம். கொரிய மலைகளும், காடுகளும், அதற்கு சாட்சி பகர்கின்றன.— 'மானிடனின் கோரரூபம் அவன் புரியும் கொடூரம், கொலைகள் முதலியவற்றைக் காணவேண்டுமாயின் என்மீது வாழ்ந்த வாலிபர்களின் துடிதுடிக்கும் குற்றுயிர்ப்பிணங்களை பாருங்கள்-இல்லை வீடுவாசலிழந்து நடக்கவும்முடியாது, சாலை ஓரங்களில் பசியின்கொடுமைக்காளாகிக் கிடக்கும் வயோதிகர், - கண்களென போற்றி வளர்ந்த பச்சிளங் குழந்தைகளை குண்டுகளுக்கிறையாக்கி வாடிய முகத்துடன் கண்ணீர்வடிய கதறியழும் பெண்கள் இல்லை. தாய்தந்தை உடன் பிறந்தார் அனைவரும்குண்டுவீச்சில் துடிதுடிக்க உயிர் விட்டகன்றுவியைக்கண்டு, கண் கலங்கிநிற்கும் எண்ணற்ற அனாதைக்குழந்தைகள் இல்லை. நடைப்பிணமாய் பிடி சோற்றுக்கும் வழியில்லாது தவிக்கும் என் துரதிர்ஷ்ட குழந்தைகள் முதலியவர்களைப் பாருங்கள் என்று கொரிய பூமாதேவி கதறுகிறாள்.

அந்தோ! பற்பல தேசத்தவரும் தங்களுக்கிடையே ஏற்படும் வேற்றுமைகளை பரஸ்பரம் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துக்கொள்ள-வகைசெய்யும்நோக்கத்தின் அடிப்படையிலே தோன்றிய சர்வதேச ஸ்தாபனம்-இன்று அரசியல் வேற்றுமைக் களஞ்சியமாய் இல்லை. போர்க்களமாய் காட்சியளிக்கிறது. ஐ. நா. சபையின் ஒவ்வொரு கூட்டமும் வல்லரசுகள் தங்கள் சக்தியை எடுத்துக்காட்டும் குஸ்தி கோதா காட்சியே யளிக்கிறது. நம் பிரச்னைகள் முடிவடைவதற்குப் பதில் இன்னும் சிக்கலடைந்துவருகின்றன

இத்தகைய நிலைமைக்குக் காரணம் நம் சிந்தனைகள் குறுகியநோக்கமுடைய கீழ்த்தர ரகத்தைச்சேர்ந்ததாயிருப்பதே.

நாகரீகம் குறித்து நாம் கொண்டுள்ள நோக்கம் குறுகியது. நாம் விஞ்ஞானத்தை மானிடசமுதாயத்தின் சுபிட்சத்திற்கு பயன்படுத்தாது, குறுகியபோக்

குக்கும் சுயநலத்திற்கும் பயன்படுத்துகிறோம். துலைக்க முடியாத ஓர் துரதிர்ஷ்டம் நம்மை சூழ்ந்துகொண்டிருக்கிறது. யுத்தத்தை தவிர்ப்பதையும், நடவாமல் இருக்க பாடுபடுவதைவிட்டு, யுத்தம் நடந்தால் நமக்கே வெற்றி கிடைக்க வேண்டுமென்ற துர்நோக்கம் கொண்டே நாம் எல்லா காரியங்களையும் செய்கிறோம். ஆகவே யுத்த அபாயம் தினசரி பெருகிவருகிறது. அணுகுண்டால் விளையப்போகும் படுநாசம் பூமியை நடுங்கச் செய்துகொண்டிருக்கிறது. ஆனால் உலகசமாதானத்தை விரும்பி அல்லும் பகலும் துடித்துக்கொண்டிருக்கும் ஆத்மாக்களை திருப்திசெய்யவேண்டுமாயின் நம் பிரச்னைகளை அரசியல் ரீதியில் தீர்க்க முற்படுவதை விட்டு மனிதத்தன்மையின் அடிப்படையில் தீர்க்க முற்படவேண்டு.''

மௌலானா அபுல்கலாம் ஆஸாத் கூறியதுபோல் கல்வியும், கலாச்சாரமும் மானிட இதயத்தை சீர்படுத்தி சீரியத் தன்மையளிக்கக்கூடியது. 'கல்வி மானிட சிந்தனையை உருவாக்கும் கலாச்சாரம் அது வளர்ந்து பூக்கவும் காய்க்கவும தக்க சூழ்நிலையை யுண்டாக்கி, நீரும் உரமும் அள்ளி தரக்கூடியது' ஆகவே நம் பிரச்னைகள் யாவும் தீரவேண்டுமென நாம் விரும்பினால் மானிட சிந்தனையை மாற்றி யமைக்கவேண்டும். அதற்கு அடிப்படையாய் கல்வி, கலாச்சார மாளிகைகளின் கதவுகளை திறந்து விடவேண்டும். ஏனெனில் அக்கதவுகளின் வழியாகவே நாம் மானிடசிந்தனை வரை செல்லமுடியும்.'' இதய - சிந்தனை உருவாக்கு காரியத்தில் விஞ்ஞானமும் தன்பங்கை நிறைவேற்றவேண்டும். அதனால் உருவாயிருக்கும் அணுசக்தி மானிட சமுதாயத்தையு, புராதன சின்னங்களை அழிக்க உபயோகிக்காது, உலகுக்கு புத்துயிரூட்ட உபயோகிக்க வேண்டு. தினசரி நவீன விஞ்ஞான விஷயங்களைக் கண்டுபிடித்து மானிடசமுதாயத்தை மாற்றியமைக்கவும் முன்னேறச்செய்யவும் பயன்படுத்த வேண்டும் ஆனால் இதுஎப்பொழுது முடியும்? குடியிருக்க வீடும், உடுக்க உடையும் உண்ண,உணவும் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற கவலை எவருக்கும் ஏற்படாதிருக்கும் சூழ்நிலையிலேயே மேற்கூறியவற்றை நிறைவேற்ற முடியும் பசியொன்றே சாபக்கேடுகள் அனைத்திலும் முதன்மையானது. ஆகவே அத்தொல்லையை அகற்றவேண்டும். பிறகு இவ்வுலகமே தெய்வலோகமாய்த்திகழும்'

ஐ. நா, கல்வி, கலாச்சாரம் விஞ்ஞான ஸ்தாபனமான இது யுனெஸ்கோ என்று அழைக்கப்படுகிறது இது திட்டப்படி கல்வி, கலாச்சாரம் விஞ்ஞானம் ஆகியவற்றின் மேற்கூறிய உன்னத நோக்கம் சித்தி பெறவே பாடு படுகிறது ஜாதி, இனம், நிறம், மதம் முதலியவற்றின் வேற்றுமைகளை அகற்றி சர்வதேச சகோதரத்துவத்தை நிலைநாட்ட பாடு படுகிறது. ஆயினும் அரசியல் வேற்றுமைகள் வளர்ந்து, ஒன்றை மற்றொரு நாடு தோற்கடிக்க முனைந்துள்ள இவ்வுலகமே அந்தஸ்தாபனத்திற்கு கிடைத்துள்ளது. நம்பிக்கையற்றுக் கிடக்கும் இவ்வுலகத்திற்கு உறுதியளிக்க வேண்டிய அந்த, ஸ்தாபனத்தின் கடமை.,

இவ்விருண்ட சூழ்நிலையில் கல்வி, கலாச்சாரம், விஞ்ஞானம் முதலியவை சூரியனைப் போல் பிரகாசித்து சிதறிப்போய் பற்பல கூட்டங்களாகிகிடக்கும் மானிடவர்க்கத்தினர் ஒன்றாய்க் கூடவேண்டிய ராஜபாட்டையை நம் கண்களுக்கு புலப்படச்செய்கிறது. ஆகவே, யுனெஸ்கோஸ்தாபனத்தின் முக்கியகடமையை சரிவர ஆற்றினால் உலகத்தைச் சூழ்ந்துள்ள துயரங்கள் அகன்று, கருப்பர். வெள்ளையர். மேற்கத்தியர், கிழக்கத்தியர் என்று மானிடனால் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு வேற்றுமைக் கொத்தளங்களும், தரைமட்டமாகிவிடும் விடா முயற்ச்சியே தேவை ஆற்றலே அவசியம் யுனெஸ்கோவில் அங்கம் வசிக்கும் ஒவ்வொருநாடும் தன் பிரதேசத்தில் சமத்துவமும் ஒற்றுமையும் நிலவத்தக்க சூழ்நிலை நிலவச்செய்யவேண்டும். பிறகு பல்வேறு வளையங்களாய் சிதறிக்கிடக்கும் தேசத்தினர் ஒன்றாய் இணைந்த பலமிக்க சங்கிலிபோல் காட்சியளிக்கும்.

இந்தியாவும் யுனெஸ்கோவில் அங்கம் வகிக்கும் நாடே ஆனால் இக்கட்டுரை எழுதுகையில் நம் நாட்டின் நிலமை நமக்கு கவலையளிக்கிறது. பல்வேறுவேறு பாடுகள் வகுப்பு வாதம் மானிட வாழ்வின் கழுத்தை நெறித்துக் கொண்டிருக்கிறது; பாஷைப் பித்து என்னும் பயங்கர பூதம் எண்ணூராண்டுகளாய் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தாய்ப் பஷையாகியிருந்த உர்தூ மொழியை மரணமெனும் நித்திரையில் ஆழ்த்த முனைந்துள்ளது. நாகரீக கலாச் சார ஸ்தாபனத்தின் காதலர்கள்; இந்திய சமுதாயத்தின் உடலில்பாயும் இந்துமுஸ்லிம் கலாச்சார செங்குருதியை வெளுத்துவிட கங்கணம் கட்டியிருக்கின்றனர். ஆகவே யுனஸ்கோவுடன் ஒத்துழைக்க தோற்றப்பட்டுள்ள இந்தியஸ்தாபனம் பெரும் பணியாற்ற வேண்டியதவசியம். ஏனெனில் தன்பிறந்தகத்தில் இந்திய தேகத்தில் உண்டாகிவிட்ட ரணங்கள்மீது மருந்து தடவி பாரதசமுதாய வாழ்வில் ஒற்றுமை சகோதரத்துவம், சமத்துவம் நிலவச்செய்ய முடியாவிட்டால் சர்வதேசத் துறையில் எவ்விதகாரியத்தையும் வெற்றி பெறச் செய்ய முடியாது. அது பெருமையுடன் கூறுபவை,யாவும்பொய்யாகிவிடும். அதன்பயனற்ற முயற்சிகள் சரித்திர ஏடுகளில் இடம்பெற்றுவிடினும மானிட நெற்றிமீது அவமானசின்னமாய்த் திகழும். ஆயினும் யுனெஸ்கோ ஸ்தாபனம் அவநம்பிக்கைகொள்ள வேண்டாம் ஏனெனில் மானிட இயற்கை சீரிய தன்மைவாய்ந்தது அது கல்வி கலாச்சாரத்தின் சிறந்தஉரத்தால் வளர்ந்துகாய்க்க கூடியதுஆகவே கல்விகலாசாரத்தின் உன்னத லட்சியங்களை பிரச்சாரம் செய்வதேயுனெஸ்கோவின் முதற் கடமை அவற்றின் அடிப்படையில் சர்வதேச ஐக்கியத்தை ஒவ்வொருநாடும் வற்ப்புறுத்த பாடுபடவேண்டும்.

MAY 1956

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறை பத்திரிகை

மலர் 4 | 23—4—1951 திங்கட்கிழமை | இதழ் 4

ஆங்கிலோ அமெரிக்க சதி

காஷ்மீர் விஷயத்தில் சுயநல வேட்டை.

சமீபத்தில் திருத்தப்பட்ட ஆங்கிலோ-அமெரிக்க தீர்மானம் ஐ. நா. பாதுகாப்புசபையில் நிறைவேறியது நெடுநாளாய் முடிவேற்படாதிருந்தகாஷ்மீர் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவந்தே தீருவது என பிரிட்டிஷ்-அமெரிக்க பிரதிநிதிகள் உறுதிபூண்டிருப்பதாய் தோன்றியது. அவர்கள் பேசிய தோரணையும், அதனால் இந்தியா - பாக்கில் ஏற்பட்ட நிலைமையும், இந்தியர்களிடையே எற்பட்ட மனக்கொதிப்பும், பாக். கடைப்பிடித்த அர்த்தபுஷ்டியான மௌனமும், ஏதோ ஓர் அந்தரங்க விஷயத்தை அம்பலப்படுத்துகின்றன. " இந்தியாவை அவமரியாதை செய்வதே அதன்நோக்கம்" என்று பண்டிதநேரு குறிப்பிட்ட பிரிட்டிஷ்-அமெரிக்க பிரதிநிதிகளின் பேச்சு நம்மிடையே சந்தேகங்களை எழுப்புகின்றன. மேலும் பாக். மௌனம் சாதிப்பதால் நம் சந்தேகங்கள் உறுதிப் படுகின்றன. ஆகவே நிறைவேற்றப்பட்ட அத் தீர்மானத்தையும், பிரிட்டிஷ் - அமெரிக்க தோரணையையும் தற்கால சர்வதேச சூழ்நிலையின் அடிப்படையில் ஆராய்ந்தே. அதன் நோக்கம் என்ன என்பதை கண்டறிய முடியும் மேலும் நேரு சர்க்கார் கடைப்பிடிக்கும் நடுநிலைக்கொள்கையையும், நாம் மனத்திலிருத்திக்கொள்வது அவசியம். ஏனெனில் எந்த தேசமாயினும் அதன் உள்நாட்டு விஷயங்களையும் வெளி விவகாரமே மாற்றியமைக்கும் காலம் இது.

பஞ்சாயத்து முறையில் காஷ்மீர் விஷயம் தீர்க்கப்படுவதை இந்தியா என்றும் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் சாதாரண விஷயங்களையும் பஞ்சாயத்துமூலம் தீர்த்துக்கொள்ள ஆலோசனை கூறப்பட்டபோதும் நேரு சர்க்கார் கடுமையாய் ஆட்சேபித்திருக்கிறது ஏனெனில் காஷ்மீரில் படையெடுத்தது பாகிஸ்தானே. அதை ஐக்கியநாடு பார்வையாளர் சர்டிக்சண்று உறுதிபடுத்தியுள்ளார். பின் பிரிட்டிஸ - அமெரிக்க செல்வாக்கு மிகுந்த ஐ. நா பாக். கை படையெடுப்பாளன் என தீர்மானிப்பதைவிட்டு அதற்கு சலுகைகள் அளிக்கவும், இந்தியா கட்டாய பஞ்சாயத்தை ஏற்க வேண்டுமென வற்புறுத்தவும் செய்வது ஏன்? அவ்வித போக்கின் உட்கருத்தென்ன? இந்தியா பலமாக ஆட்சேபித்ததால் தீர்மானம் திருத்தப்பட்டதென்பது உண்மையே. ஆனால் மத்தியஸ்தரால் தீர்க்கப்படாத விஷயங்கள் கட்டாய பஞ்சாயத்து மூலம் தீர்மானிக்கப்படவேண்டும் என்ற ஷரத்து அப்படியே உண்டு அப்பஞ்சாயத்தை சர்வதேச நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் என்பது யாவரும் அறிந்ததே.

அத்தீர்மானத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளவேண்டும். என்று ஆங்கிலோ - அமெரிக்க ஏகாதிபத்தியத்தார் வற்புறுத்துவதால் நம் சந்தேகங்கள் வலுவடைகின்றன. மேலும் தீர்மானம் பிரேரிக்கப்படுவதற்கு ஒருநாள் முன்பே பஞ்சாயத்துமுறையை இந்தியா எற்க வேண்டுமென பிரேஜில் பிரதிநிதி செய்த முயற்சி தோல்வியடைந்ததை ஏகாதிபத்தியங்கள் நன்குஅறியும். அதன்பிறகும் கட்டாய பஞ்சாயத்து தீர்மானத்தை நிறைவேற்ற முற்படுவது நமக்கு பல சந்தேகம் கொள்ளச்செய்கிறது.

காஷ்மீர் விஷயத்தில் இந்தியா - பாக் கிடையே ஏற்பட்டுள்ள தகராரை தீர்த்துவைக்க ஆங்கிலோ - அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் திடீரென உற்சாகம் அடைந்திருப்பது ஏன்? இந்தியாவை குற்றவாளியாக்கவும் பாக். கை குற்றமற்றதென்றும் தீர்மானிக்கவும், அகில உலகிலும், பறைசாற்றவும் முற்பட்டிருப்பதற்கு காரணம் என்ன? என்பனபோன்ற வினாக்களுக்கு நாம் ஆரம்பத்தில் கூறியதுபோல் சர்வதேச சூழ்நிலையின் அடிப்படையில் ஆராய்ந்தே விடை காணமுடியும்

உலக படத்தைப் பார்த்தால் கொரிய முதல் பர்லின் வரை கொரியா, சீனா, காஷ்மீர், பாகிஸ்தான் அப்கான், ஈரான், துருக்கி, கிரீஸ், யுகாஸ்லாவியா, ஆஸ்டிரியா, மே. ஜர்மனி, பின்லாந்து முதலிய தேசங்களுடன், ரஷ்ய கோஷ்டி நாடுகளின் எல்லைகள் சந்திப்பதைக் காணலாம். அந்நாடுகளுடன் ரஷ்ய உறவு எவ்விதமிருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும். வட கொரியா - சீனா ஆகியவற்றின் போக்கு சந்தேகமற தெளிவானது. அப்கான் வெளிப்படையாக ரஷ்யாவுடன் நேசங்கொண்டிருக்கவில்லை எனினும். எத்தகைய நிலைமையிலும் விரோதித்துக்கொள்ளவும் முற்படாது என்பது நிச்சயம். யுத்தம் மூண்டால் கடுமையான நடுநிலைக் கொள்கையை பின்பற்றும் அல்லது ரஸ்யாவுடன் சேர்ந்து கொள்ளும் துரதிர்ஷ்டவசமாய் ஆங்கிலோ - அமெரிக்காவுடன் சேர்ந்துகொள்ளும் பட்சத்தில் வெள்ளை ராணுவம் அங்கு வந்து சேருவதற்குள் செம்படைகள் அதை ஹதம் செய்துவிடும். அப்கான் - ஈரான் எல்லையில் அமைந்துள்ள ரஷ்ய ஜனநாயக நாடுகளில் ராணுவ தளவாட உற்பத்தி அபரிமிதமாய் நடைபெறுவதை கடந்த யுத்தத்தில் நாம் கண்டோம் ஸ்டாலின்கிராட் வரை முன்னேறிய ஜர்மன் பட்டாளங்கள் மேற்கு ரஷ்யாவை அழித்துக்

கொண்டிருக்கையில் தளவாட உற்பத்தியில் ஈடுபட்டு ரஷ்யாவை புத்துயிர் பெறச்செய்த பிரதேசம் ஈரான், அப்கான், எல்லையில் அமைந்துள்ள சோவியத்நாடுகளே என்பதை நாம் மறந்துவிடலாகாது மேலும் அதே நாடுகள் மூலமே ஆங்கிலோ அமெரிக்க உதவி ஸ்டாலின்கிராட் வரை சென்றுகொண்டிருந்தது.

இன்றுள்ள ஈராண்ய நிலைமை தெளிவானது. ஜனரல் ரஸ்ம் ஆரா படுகொலை செய்யப்பட்ட பின் ஈரானைப் பொருத்தமட்டில் ஆங்கிலோ - அமெரிக்கர் நிராசையடைந்துள்ளனர். எண்ணைப் பிரதேசத்தில் தோன்றியுள்ள கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டங்களும், வெள்ளையர் பீதியடைந்துள்ளதையும், பலர் கொல்லப்பட்டிருப்பதையும் ஈரானிய சர்க்கார் அக்கலவரங்களை அடக்க சக்தியற்றிருப்பதும், ஏகாதிபத்தி அமெரிக்க கோஷ்டியைய நடுநடுங்கச் செய்து கொண்டிருக்கின்றன. துருக்கி, கிரீஸ், இரண்டும் பூரணமாய் மேற்கத்தி வெள்ளையரிடம் நேசம்கொண்டிருப்பினும், பரந்தரஷ்ய நாடுகளின்மீது குண்டு வீச அவ்விரண்டே போதும் என்று மேற்கத்தி வல்லரசுகள் வாளாவிருக்க முடியாது ரஷ்யாவின் மேற்கில் ரஷ்ய நேசநாடுகள் கோட்டையைப்போல் அமைந்திருக்கின்றன. அவற்றைக் கடந்து ரஷ்யாவைத் தாக்குவது வெகு சிரமம்,

மேற்கூறிய விஷயங்களை மனதிலிருத்திய பின் கஷ்மீர், பாக் இருநாடுகளையும் நோக்கவேண்டும் மேற்கத்தி நாடுகளுடன் ஒத்துழைக்க பாக். என்றுமே தயார் என்று பாக். அரசியலார் பலமுறை கூறிவிட்டனர். கடந்த ஜூன்மாதம் கொரிய யுத்தத்தில் ஐ. நா. வுக்கு ராணுவ உதவியளிக்க முடியாது என்று இந்தியா கூறிவிட்டது. ஆனால் ராணுவ உதவி அளிக்க முடியாததற்கு பாக். கூறிய காரணம் ஆழ்ந்து கவனிக்கத் தக்கது.

காஷ்மீர் விவகாரத்தில் இந்திய அபாயம் இல்லாதிருப்பின், கொரியாவில் அமெரிக்க முதலாளித்துவ ஆசிக்கம் நீடிக்க ராணுவ உதவி கட்டாயம் அளித்திருக்கும். என்று பாக். கூறியது நினைவிருக்கலாம்.

சமீபத்தில் வெளியான பாக். சதி திட்டத்தை லியாகத் அலீ விவரிக்கையில், வெற்றியடைந்தபின், பாக். கில் கம்யூனிஸ்ட் ஆட்சி நிறுவப்பட, பொருளாதார அரசியல் உதவியளிக்க தயாராயிருப்பதாக ஓர் வெளிநாடு சதிகாரர்களுக்கு உறுதியளித்திருக்கிறது என்று கூறியிருக்கிறார் பாக். பிரதமர் அந்த அந்நியநாடு எது என்று கூறவில்லையாயினும் சோவியத் ரஷ்யா தவிர வேறில்லை. என்பது நிச்சயம் அதனால்தான் பாக். சதி வெற்றியடையாததுகண்டு ஆங்கிலோ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் திருப்தியடைந்து சந்தோஷம் கொண்டன. ஆகவே பாக். பூரணமாய் மேற்கத்தி நாக்களுடன் கொஞ்சிக் குலாவுகிறது என்பதற்கு பல ஆதாரங்கள் கூறமுடியும் பாக். கில் நடந்த சதி பாகிஸ்தானுக்கும், ஏகாதிபத்திங்களுக்கும் நிறைவேறிய ஓர் ரகசிய ஒப்பந்தத்தை அறிந்து கொண்டவர்களாலேயே நடத்தப்பட்டது அவ்வொப்பந்தப்படி பாக். கில் அமெரிக்க கோஷ்டியினருக்கு ராணுவதளங்கள் கொடுப்பதாய், பாக். அரசியலார் வாக்களித்துள்ளனர். என்றும் சில விஷயமறிந்தவர்கள் கூறுகின்றனர் ஆக்ரமிக்கப்பட்ட காஷ்மீர் பகுதியில் அமெரிச்க விமானதளம் அமைக்கப் போவதாக சமீபத்தில் ரஷ்ய ரேடியோ வெளியிட்ட செய்தியும், பாகிஸ்தான் அது பொய்யென மறுதளித்ததும் நினைவிருக்கலாம்.

மேலும் சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் போக்கு. அதனால் ஆத்திரமூண்ட அமெரிக்கா, உணவு தட்டுப்பாட்டினால் பஞ்சத்தால் அவதியுறும் இந்திய மக்களுக்கு, சர்வதேச சகோதரத்துவத்தின் அடிப்படையிலும் உணவு தானியமளிக்கவும் தயங்குவதையும் பாகிஸ்தான் அறியும் ஆகவே அத்துறையிலும் அனுகூலம் அடைய முயல்கிறது. ஆகவே பர்லின் முதல் கொரியா வரை நீடிக்கும் குழப்பமயமான நிலைமையில் எவ்விதத்திலும் காஷ்மீர் பாகிஸ்தானுக்கு கிடைத்துவிட வேண்டும் என அமெரிக்க - பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் விரும்புகின்றன. ....அவ்விதமாயின் மேற்கத்தி நாடுகளுடன் ஒத்துப்பாடும் பாகிஸ்தானுக்கு பிரதிபலனும் கிடைத்துவிடும், மூன்றும் உலகயுத்தம் ஏற்பட்டால் அங்கு விமான தளமமைத்து மத்திய ஆசிய சோவியத் நாடுகள்மீது குண்டுவீசி ரஷ்யாவை பின்புறமிருந்து தாக்கவும் பிரிட்டிஷ் - அமெரிக்க ஏகாதிபத்தியங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துவிடும்

காஷ்மீர் விவகாரத்தில் பிரிட்டிஷ் - அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் ஐ நா வில் குட்டை குழப்புவதற்கும், இந்தியாவை அவமானப்படுத்தும் ரீதியில் பேசுவதற்கும் இதுவே காரணம். ஆனால் இந்தியாவை பகைத்துக் கொள்வதால் முடிவில் பாகிஸ்தானுக்கு பெரு நஷ்டமாகிவிடும். பாகிஸ்தானை ஏற்படுத்த பாடுபட்ட பாக். பொதுமக்கள் பெரும் அனர்த்தங்களுக்கு இரையாகிவிடுவர் அவர்களுடைய சுதந்தரமே பறிபோய்விடும். காஷ்மீர் மக்கள் என்ன தீர்மானிக்கப் போகின்றனர் என்பது பிறகு நடக்கக்கூடியது அதற்கு முன்பே, பாக். மக்கள் பற்பல சதிகளுக்கு இலக்காகிவிடுவர். அவ்வித சதிகளை ஏற்படுத்துவதில் வெள்ளையர் கைதேர்ந்தவர்கள். அல்லாமா இக்பாலும் பல வருடங்களுக்கு முன்பே வெள்ளையரின் தில்லுமல்லுகளினின்றும் மக்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று கூறி இருக்கிறார்.

எத்தகையநிலைமையிலும் ஐ நா. தீர்மானத்தை ஏற்க முடியாது என்று இந்திய பிரதமர் பண்டிதநேரு சந்தேகமற கூறிவிட்டார். இனி என்ன நடக்கும் என்பதை வருங்காலமே தெளிவாக்கும் ஆனால் ஒன்று

மட்டும் நிச்சயம் ஐ. நா அநியாயத்தையே ஆதரிக்க முற்பட்டால் இந்தியாவுடன் அதற்குள்ள உறவு குலைந்து போகும் அதனால் இந்தியாவுக்கு நஷ்டம் உண்டாகலாம். ஆனால் மேற்கத்தி நாடுகளுக்கும், உலக சமாதானத்திற்கும் அதனால் விளையும் கேடு இந்தியாவுக்கு ஏற்படும் நஷ்டத்தைவிட பல பங்கு அதிகமாயிருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி.

“சுயநல யுத்தகளத்தில் பல்வேறு சுயநல நோக்கமுடையோர் ஒருவரோடொருவர்மோதுகையில் ஒற்றுமை நிலவச்செய்வது அசாத்தியம் ஆனால் கல்வி அரங்கில் மானிட சிந்தனை உற்பத்தி செய்யு நவீனங்கள் வெளியில் தோன்றுகையில் ஒற்றுமை தானே நிலவி விடும் என்பது மட்டுமல்ல அவற்றின் இயற்கை விளைவே ஒற்றுமைதான் அரசியல் சுயநல வேட்டையில் நமக்கு கிடைக்காத உன்னத லட்சியம் அரசியல்வாதிகளிடம் எதிர்பார்த்து நம்பிக்கை ஒளி கிடைக்காது மனம் வெதும்பிக் கிடக்கும் மானிடர்க்கு கல்வி, கலாச்சார சேவகர்களின் உதவியால் கிடைத்து விடுதல் கூடும்”, என்று மௌலானா ஆஸாத் கூறியது முற்றிலும் உண்மை,

இல்வடிவப்படையின் மீது சர்வ தேசங்களும் தமது போக்கை மாற்றிக்கொள்ள தயாராயிருக்கின்றனவா? என்பதே முக்கிய கேள்வி. ஏனெனில் அவ்வித மாற்றம் அவசியம் என்ற எண்ணம் தோன்றினாற்றான் சர்வதேச சகோதரத்துவம் நிலைபெற முடியும் என்பது திண்ணம்

கூண்டுக்கிளியின் துடிப்பு

ஈரானிய மக்கள் உயிர் பெற்றெழுந்தனர்

எண்ணெய் தொழிலை தேசிய மயமாக்கும்

புரட்சிப் போர்

மார்ச் 7உ பிரதமர் ரஸ்ம் ஆரா படுகொலை செய்யப்பட்டு சிலதினங்களில் ஈரானிய பார்லிமெண்டு பெட்ரோல் கிணறுகள் யாவும் தேசிய மயமாகவேண்டும் என்று ஏக மனதாய்த் தீர்மானம் நிறைவேற்றிவிட்டது. இதனால் ஆங்கில—ஈரானிய கம்பெனி என்ற போர்வையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நடத்திவந்தகொள்ளைக்கு முடிவு ஏற்பட்டுவிடும். ஆனால் அது என்று என்பதை தீர ஆலோசித்த பின்பே கூறமுடியும். ஏனெனில் அத்தீர்மானத்தைக் குறித்து பிரிட்டிஷார் அடைந்துள்ள பீதி மிக முக்கியத்துவம் வாய்ந்தது. எண்ணை ஒப்பந்தத்தை பலவந்தமாய் முறிக்க முடியாது என்று பிரிட்டிஷார் ஈரானிய சர்க்காருக்கு அறிவித்துள்ளனர். எண்ணை உற்பத்தி தேசிய மயமாக்கப்படுவதால் பிரிட்டிஷார் தமது முதலீடை ஈரானியர்களுக்காக விட்டுக்கொடுக்க முடியாது. 1933ல் செய்துகொள்ளப்பட்ட 60 ஆண்டு ஒப்பந்தத்தை ஈரான் பார்லிமெண்ட் நிறைவேற்றிய தீர்மானம் முறித்து விடுவதாய்த் தோன்றுகிறது. ஈரானிய சர்க்கார் இதை மறுபடி பரிசீலனை செய்யாவிட்டால் இவ்விஷயம் சர்வ தேச நீதி மன்றத்திற்கு அனுப்பப்படும் என்றும் நாம் ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்ய தயாராயிருக்கிறோம். ஈரானுக்கு சலுகைகள் அளிக்கவும் நினைக்கிறோம். லாபத்தை இருவரும் சமமாப் பங்கிட்டுக்கொள்ளலாம் என்றும் பிரிட்டிஷ் அரசாங்கம் தமது தூதர் மிஸ்டர் பிரான்சிஸ் ஷேபர்டு மூலம் ஈரான் சர்க்காரிடம் கூறியுள்ளதாய் செய்திகள் கூறுகின்றன.

பிரிட்டிஷ் சர்க்காரின் மேற்கூறிய செய்தி, ஈரானியரிடையே தோன்றியுள்ள தேசீய உணர்ச்சியாலும், சர்வதேச சூழ் நிலையாலும் பிரிட்டிஷ் சர்க்கார் பெட்ரோல் விஷயத்தில் ஈரானுக்கு விட்டுக்கொடுக்கவும் தயாராயிருப்பினும், ஒரேயடி சம்பந்தத்தை அறுத்துக் கொள்ளாதென்பதை உறுதிப்படுத்துகிறது. ஈரானிய பட்ஜெட்டில் கால்பாகத்திற்கு ஏற்ற தொகையை எண்ணை கம்பெனி ஆண்டுதோறும் ஈரானுக்கு அளித்து வருகிறது. ஆனால் தமது மேற்கத்தி பங்குதார்களுக்கு இரு லட்சம் பவுண்டு கொடுப்பதை ஈரான் மக்கள் பார்த்து மனம் வெதும்பிப்போகின்றனர். ஆகவே அப்பெரும் தொகையும் ஈரானுக்கு கிடைத்துவிட்டால் முழு பட்ஜெட்டுக்குக் கவலைப்பட வேண்டிய அவசியமிருக்காது என்று எண்ணுவது இயற்கையாகும். மேலும் எண்ணையும் எண்ணைப் பிரதேசமும் அவர்களுக்கே சொந்தமானது என்பதை பார்க்கும்போது அவர்களுடைய எண்ணம் இன்னும் உறுதியடைகிறது. எண்ணைத்தொழில் தேசிய மயமாக்கப்பட்டால் ஈராணிய நாடு செழித்தோங்கும். ஆகவே பிரிட்டிஷார் மூட்டை முடிச்சுகளுடன் நிரந்தரமாய் வெளியேறிவிட்டால் நம் பொருளாதார அரசியல் பிரச்னைகள் தீர்ந்துவிடும்—என்று அஞ்சுமனே பிதா இயானே இஸ்லாம் தலைவர் அல்லாமா அபுல் காஸிம் காஷாபியின் கூற்று எத்தகைய உண்மை வாய்ந்தென்று தெறிகிறது,

ஈரான் எண்ணை வரலாறு.

ஈரான் எண்ணை வரலாறு மிக பழமையானது, எனினும், பத்தொன்பதாம் நூற்றாண்டு பிற்பகுதியில் தான் பூமியினின்றும் ஊற்றாய்ப் பாய்ந்தோடும் அப்பொருளிடம் கவனம் செலுத்தப்பட்டது. காச்சார்ஷா காலத்தில் எண்ணை அகப்படும் பிரதேசங்களைக் கண்டு பிடிக்க பல ஸ்தாபனங்களுக்கு உரிமையளிக்கப்பட்டது 1901 ல் பெயர்பெற்ற பொருளாதார நிபுணர் வில்லியம் நாக்ஸ் டீ என்பவருக்கு 60 ஆண்டு உரிமையளிக்கப்பட்ட பத்திரம் கையொப்பமிடப்பட்டு, அவர் பர்மா ஆயில் கம்பெனி என்ற பெயருடன் எண்ணைப் பிரதேசங்களைக் கண்டு பிடிக்கும் காரியத்தைத் தொடங்கினார். பல வருடங்கள்வரை வெற்றி கிட்டவில்லை.

முடிவில் 1908 ல் மே 26 தேதியன்று எண்ணெ கண்டு பிடிக்கும் வேலையை முடித்துவிட வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின் புராதன பராதீன தேவாலயம் அதாவது மஸ்ஜிதே சுலைமானுக்கு சமீபம் 1100 அடி ஆழத்தில் எண்ணெ ஊற்று கிளம்பியது. பிறகு 1909 ல் ஆங்கிலோ ஈரான் எண்ணெ கம்பெனி நிருவப்பட்டு ஷத்துல் அரப் சமீபம் அபாதான் என்ற விடத்தில் கட்டிடங்கள் கட்டவும், சாலைகள் போடவும், எண்ணெயை சுத்தப்படுத்தும் ஆலைகள் அமைக்கவும் வேண்டி வேலை ஆரம்பமாயிற்று. ஆகஸ்டு 1912 வரை 145-மைல் நீளமுள்ள எண்ணெக்குழாய் அமைக்கப்பட்டது. செப். அக். 1912ல் அறு லட்சம் காலன் எண்ணெ சுத்தப்படுத்தப்பட்டது. ஆகவே உலக எண்ணெப் பிரதேசங்களில் ஈரானும் ஒன்று என்று நிச்சயமாயிற்று. அன்று, ஈரான் எண்ணெ அந்நாட்டுக்கு வரப்பிரசாதமா? அல்லது சாபக் கேடா? என்று நிச்சயமாகவில்லை ஆனல் இன்று 1951ல் ஈரானின் அப்பெருஞ்செல்வமே அதற்கு அடிமை அழிவு ஆகியவற்றின் காரணமாயிற்று என்று நிச்சயமாய்க் கூறலாம். ஈரான் தன் எண்ணெச் செல்வத்தால் பிரிட்டிஷ், ஆகாய, கடற்படைகளின் சக்தியை இரு பங்கு உயர்த்தியது. இயந்திர காலத்தில் யுத்த விஷயங்களில் பேருதவியளிக்கும் இம் முக்கிய பொருளுக்கு திண்டாட வேண்டிய அவசியம் பிரிட்டனுக்கு இருக்கவில்லை இக்காரணத்தாலேயே கடந்த உலக யுத்தங்களில் ஜர்மன், ரஷிய வல்லரசுகள் ஈரான் எண்ணெ பிரிட்டனுக்கு கிடைக்காதவாறு செய்துவிட பெரிதும் முயன்றன. இன்னும்ஈரானில் ரஷ்யசிரத்தைக்குக்காரணம் அதுவே.

முதல் மகா யுத்தத்திற் குப் பின்

1901 ல் நிறைவேறிய 60 ஆண்டு ஒப்பந்தப்படி வில்லியம் டி. ஆர். ஸி க்கு அளிக்கப்பட்ட சலுகைகளைப்பொருத்து முதல் மஹாயுத்தத்திற்குப்பின் ஏற்பட்ட ஈரான் சர்க்கார் அதிருப்தியடைந்தது. 1917 ல் ரஷ்யாவில் ஸார் ஆட்சி தோல்வியடைந்ததும் 1907-ம் ஆண்டு ஒப்பந்தத்தை ரத்து செய்து ரஷ்யா தன் படைகளை ஈரானினின்றும் வாபஸ் வாங்கியது. அன்று பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரியாயிருந்த லார்டு கர்ஸன் ரஷ்ய செய்கையால் பயன்பெற ஈரான் முழுதிலும் பிரிட்டிஷ் படைகளை அனுப்பிவிட்டார் மேலும் 1919 ல் ஈரான் மன்னர் ஷாகஜ்குலாஹ்வை வற்புறுத்தி ஈரான் அனைத்தையும் பிரிட்டிஷ் கொடியின்கீழ் அடிமையாக்கும் ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடச் செய்யப்பட்டது இதைக்கண்ட ரஷ்யா 1920ல் கிலான் பிரதேசத்தில் தன் படை பலத்தையனுப்பி பொதுவுடமை சர்க்காரை அமைத்தது மேலும் வளம்மிக்க மாஸிந்தரான் பிரதேசத்திலும் சோவியத் ஆட்சி ஏற்படுத்த முயற்சிகள் நடந்து வந்தன மீறு புறம் மன்னர் தம் கேளிக்கைகளில் ஈடுபடவும், உல்லாச வாழ்க்கை நடத்தவும் ஈரானை மேலும் அடிமைத்தளைகட்கு பிணைத்துக் கொண்டிருந்தார். பொதுமக்கள் பொருமையிழந்து வீரிட்டெழுந்தனர் ரஸாஷாபஹ்லவியின் தலைமையின் கீழ் போராடி நிர்வாகத்தை மாற்றியமைத்தனர் அன்று நடந்த புரட்சி போரால் மக்கள் உற்சாகமடைந்தனர். அவர்களுடைய வாழ்க்கையே புரட்சிமயமாகிவிட்டது என்பது வெளிப்படை ஆனல் நாம் இச்சந்தர்ப்பத்தில் எண்ணெயைப்பற்றியே ஆராய்கிறோமாதலில், புரட்சிமயமான ஈரான் மக்கள் அவ்விஷயத்தில் என்ன செய்தனர் என்பதையே கவனிப்போம்

சுய நலத்தின் காரணமாய் ஈராணிய நலத்தைக் கெடுத்து அதன் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிட்ட சுய நல மன்னர் செய்த ஒப்பந்தங்களால் பொது மக்கள் அதிருப்தியடைந்தனர். ஆகவே 1920 டிசம்பரில் ஓர் இடைக்கால ஏற்பாடு செய்யப்படவேண்டுமென விரும்பினர் ஆனல் 1928 வரை ஈரான் சர்க்கார் அதை ஏற்கவில்லை. 1928ல் பிரிட்டிஷ் அரசாங்கம் சிலபுதிய யோசனைகளைக்கூறியது. ஆனல் அவை யாவும் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தினரின் லாபத்தையே முக்கிய நோக்கமாய் கொண்டிருந்ததால் 1932 நவம்பர் 27 ம்தேதி மன்னர் ரஸாஷாஹ் எல்லா சலுகைகளையும் ரத்து செய்துவிட்டார் பிரிட்டிஷ் கிழச்சிங்கம் இத்தகைய அவமானத்தை ஏற்குமா? ஆகவே ஈரான் மன்னரை மிரட்டும் நோக்கோடு பாரசீக வளைகுடாவில் தன் கடற்படையை அனுப்பிவைத்தது. ஆனல் ரஸாஷா ஒரு இம்மி அளவேனும் விட்டுக் கொடுக்கவில்லை. ஆகவே பிரிட்டிஷ் தில்லுமல்லு தந்திரம் அரங்கேறி சர்வதேச சபையிடம் நியாயம் கோரியது. பலத்த விவாதத்திற்குப்பின் 1933 மே மாதம் 60 ஆண்டு ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டது அதன் மூதம் எண்ணெ கம்பெனி அளித்துவந்த 16 சதவிகிதத்திற்குப் பதில் 20 சதம் லாபம் ஈரானுக்கு அளிக்கவேண்டியதாயிற்று. ஆனல் இரண்டாம் உலக யுத்தத்திற்குப்பின் உலகம் பெரும் மாறுதல் அடைந்துவிட்டது: 1946 ல் ஈரானில் ஆஸர் பாய்ஜான் மாகாணம் கலவரம் புரியவாரம்பித்தது. அக்கலவரத்திற்கு முக்கிய காரணம் ரஷ்ய தலையீடே என்று கூறப்படுகிறது. ரஷ்யா தனது ஆதிக்கத்தை விஸ்தரிக்கும் காரியத்தில் 1945முதல் முனைந்துள்ளது என்பதை முக்கியமாய் கவனிக்கவேண்டும். சூழ் நிலையடைந்த மாறுதலாலும், ஈரான் மக்கள் புரட்சி மனப்பான்மையடைந்து வந்ததாலும் 1949ம் ஆண்டு மற்றொரு ஒப்பந்தம்செய்து கொள்ளப்பட்டது. அதனல் 1933 ஒப்பந்தப்படி எண்ணெ கம்பெனி ஈரான் சர்க்காருக்கு அளித்துவந்த லாபப்பங்கு அதிகரிக்கப்பட்டது.